# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:114** **தேதி:-07.07.2016**

### *ஓய்வூதியதாரர்க்கு 78.2% பஞ்சப்படி இணைப்பு மற்றும் இதர செய்திகள்*

அன்பார்ந்த தோழர்களே,

05.07.2016 அன்று கூடிய அமைச்சரவை 10.06.2013 முதல் BSNL ஓய்வூதியதாரருக்கு 78.2% பஞ்சப்படி இணைப்பிற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. பல கட்ட போராட்டங்களுக்கு பிறகு இன்று தீர்வு கிடைத்துள்ளது. இதனால் பயன் பெற உள்ள அனைத்து ஓய்வூதியதாரருக்கும், குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கும் BSNL ஊழியர் சங்கம் தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

**BSNL மற்றும் DOT ஓய்வூதியதாரர்களின் ஓய்வூதிய சுமைகளை மத்திய அரசே ஏற்றுக் கொள்ளும்- அமைச்சரவை முடிவு:-** BSNL ஓய்வூதியதாரர்களின் ஓய்வூதிய சுமையினை மத்திய அரசே முழுமையாக ஏற்றுக் கொள்ள வேண்டும், 60:40 என்ற முறையினை நீக்க வேண்டும் என்பது BSNL ஊழியர் சங்கம் மற்றும் FORUM அமைப்புகள் நடத்தி வரும் பல்வேறு போராட்டங்களின் முக்கிய கோரிக்கைகளில் ஒன்று. 05.07.2016 அன்று நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் நமது கோரிக்கையினை மத்திய அமைச்சரவை ஏற்றுக் கொண்டுள்ளது. இதற்காக ஒன்று பட்டு போராடிய அனைத்து அதிகாரிகளையும், ஊழியர்களையும் தமிழ் மாநில சங்கம் மனதார பாராட்டுகிறது.

FORUMத்தின் அறைகூவலின் அடிப்படையில் நடைபெற்ற ஏப்ரல் 21 மற்றும் 22 தேதிகளின் நடைபெற்ற வேலை நிறுத்தத்திற்கு பின் 01.05.2015 அன்று DOT செயலாளருடன் நடைபெற்ற பேச்சு வார்த்தையில் நமது கோரிக்கைகளான ஓய்வூதியதாரர்களுக்கான 78.2% பஞ்சப்படி இணைப்பு மற்றும் ஓய்வூதியம் வழங்குவதற்கு இருந்த 60:40 என்ற முறை நீக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்தபோது DOT செயலாளர் அதனை ஏற்றுக் கொண்டார். அதன் அடிப்படையில் உருவாக்கப்பட்ட அமைச்சரவைக் குறிப்பு இன்று மத்திய அமைச்சரவையால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக போராடிய ஊழியர்களுக்கும், குறிப்பினை தயாரித்த DOT செயலாளருக்கும், அமைச்சரவையில் இந்த பிரச்சனையை எடுத்து விவாதித்த மத்திய தொலை தொடர்பு அமைச்சருக்கும் FORUM தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

**GM(Estt) உடன் மத்திய சங்கம்:-** 05.07.2016 ஆர்ப்பாட்ட அறைகூவல் தொடர்பாக 05.07.2016 அன்று நிர்வாகம் நமது மத்திய சங்கத்தை பேச்சு வார்த்தைக்கு அழைத்திருந்தது. ஊழியர்களின் பிரச்சனைகள் இயக்குனர் குழுக் கூட்டத்தில் ஒப்புதலை பெறுவதற்கு BSNL நிர்வாகம் எடுத்து வரும் நடவடிக்கைகள் தொடர்பாக GM(Estt) திருமிகு மது அரோரா அவர்கள் விளக்கமாக எடுத்துரைத்தார். உடனடி தீர்வை தவிர வேறு எதையும் நம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது என UNITED FORUM தலைவர்கள் தெளிவாக தெரிவித்தனர். இந்த மாதம் டெல்லியில் கூட உள்ள BSNL ஊழியர் சங்கத்தின் மத்திய செயற்குழுவில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் திட்டமிட உள்ளதாகவும் தெரிவித்தனர். UNITED FORUM சார்பாக தோழர் P.அபிமன்யு GS BSNLEU, தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி DGS BSNLEU, தோழர் சைபால் சென்

குப்தா பொருளாளர் BSNLEU மற்றும் தோழர் சுனில் கௌதம் Dy.GS SNATTA ஆகியோர் நிர்வாகத்தை சந்தித்தனர்.

**JTO LICE தேர்வு முடிவுகள்:-** தோழர் P.அபிமன்யு GS BSNLEU, தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி DGS BSNLEU, தோழர் சைபால் சென் குப்தா பொருளாளர் BSNLEU மற்றும் தோழர் சுனில் கௌதம் Dy.GS SNATTA ஆகியோர் GM(Estt) திருமிகு மது அரோரா அவர்களை 05.07.2016 அன்று சந்தித்து இடைக்கால தடை இல்லாத மாநிலங்களில் JTO LICE தேர்வு முடிவுகள் வெளியிட வேண்டும் என வலியுறுத்தினர். இந்த தேர்விற்கான அறிவிப்பை ஒவ்வொரு மாநில தலைமை பொது மேலாளர்களும் தனித்தனியாக கொடுத்துள்ளதால், ஒரு குறிப்பிட்ட மாநிலத்தில் கொடுக்கப்பட்டுள்ள இடைக்கால தடை மற்ற் மாநிலங்களுக்கு பொருந்தாது என்பதால் இதர மாநிலங்களுக்கான தேர்வு முடிவுகளை உடனடியாக வெளியிட வேண்டும் என நமது தலைவர்கள் வலியுறுத்தினார்கள். இது தொடர்பாக கவனிப்பதாக GM(Estt)அவர்கள் தெரிவித்தார். பின்னர் தோழர் P.அபிமன்யு GM(Rect) திருமிகு அனிமா ராய் அவர்களை சந்தித்து இதே கோரிக்கையினை எழுப்பினார். இந்த கோரிக்கையினை முழுமையாக ஏற்றுக் கொண்ட GM(Rect) தேவையான நடவடிக்கையினை மேற்கொள்ள உறுதி அளித்துள்ளார்.

**SC/STஊழியர்கள் தொழிற்சங்க உரிமைகளை மறுக்கும் நிர்வாகம்:-** கார்ப்பரேட் அலுவலகத்தில் உள்ள SC/ST பிரிவிலிருந்து 18.03.2016ம் தேதியிட்ட கடிதத்தில் SEWA BSNL உறுப்பினர்கள் வேறு எந்த தொழிற்சங்கத்திலும் இருக்கக் கூடாது என்று தெரிவித்து உள்ளது. இது SC/ST ஊழியர்களுக்கான தொழிற்சங்கத்தில் சேரும் உரிமையை மறுக்கும் செயலே அன்றி வேறு எதுவும் கிடையாது என BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு 05.07.2016 அன்று GM(Pers) திரு D.சக்கரவர்த்தி அவர்களை சந்தித்த போது தெரிவித்ததோடு அந்த உத்தரவை உடனடியாக திரும்ப பெற வேண்டும் என்று வற்புறுத்தி உள்ளார். இது தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக GM(Pers) உறுதி அளித்துள்ளார். இது தொடர்பாக BSNL CMD அவர்களுக்கும் நமது மத்திய சங்கம் கடிதமும் எழுதி உள்ளது.

**போராட்டங்களின் காரணமாகவே BSNL பாதுகாக்கப்பட்டுள்ளது:-** மத்திய திட்டக் கமிஷனுக்கு பதிலாக மத்திய அரசால் உருவாக்கப்பட்டுள்ள 'நிதி ஆயோக்' பங்கு விற்பனை செய்ய வேண்டிய/மூடு விழா நடத்தப்பட வேண்டிய பொதுத்துறை நிறுவனங்களின் பட்டியலை பரிந்துரைத்துள்ளது. அதில் BSNLம் ஒன்று. இது தொடர்பாக அமைச்சரகங்களுக்கு இடையேயான செயலாளர்களின் கூட்டம் ஒன்று நடைபெற உள்ளது. எந்தெந்த நிறுவனங்களில் ஊழியர்களிடையே குறைவான எதிர்ப்பு உள்ளதோ அந்த பொதுத்துறை நிறுவனங்களில் மட்டும் பங்கு விற்பனை/கேந்திரமான விற்பனை என்பதை தற்போது பரிசீலிக்க உள்ளதாக அரசாங்கத்தில் உள்ள மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்து உள்ளார். பங்கு விற்பனை மற்றும் தனியார்மயமாக்கலுக்கு எதிராக BSNLல் தொடர்ச்சியான ஒன்று பட்ட போராட்டங்கள் பெரிய எண்ணிக்கையில் நடைபெற்றுள்ளதை நாம் நினைவு படுத்த விரும்புகிறோம். BSNLஐ பங்கு விற்பனை மற்றும் தனியார்மயமாக்கலில் இருந்து பாதுகாத்தது நமது ஒன்று பட்ட போராட்டங்களே என்பது தற்போது தெளிவாகி உள்ளது. நாம் BSNLஐ பாதுகாக்க தனியார்மயமாக்கலுக்கு எதிராக/பங்கு விற்பனைக்கு எதிராக தொடர்ந்து உறுதியாக போராட உறுதி ஏற்போம்.

**NFTE தனது நிலையினை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என FORUM கடிதம்:-** NFTE தனது இணைய தளத்தில் தனது தேசிய செயற்குழு நடைபெறும் வரை FORUMத்தின் நடவடிக்கைகளில் இருந்து விலகி இருக்கப்போவதாக 27.05.2016 அன்று தனது இணைய தளத்தில் வெளியிட்டுள்ளது. இது தொடர்பாக 23.06.2016 அன்று நடைபெற்ற FORUM கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு NFTE சங்கம் தனது நிலைபாட்டினை மறு பரிசீலனை செய்து மீண்டும் FORUMத்தின் நடவடிக்கைகளுக்கு வரவேண்டும் என FORUM சார்பாக ஒரு கடிதம் எழுதி உள்ளது.

**+2 தகுதி இல்லாத தோழர்களுக்கு JEக்கான முன் தகுதி தேர்வு நடத்த வேண்டும்**:- புதிய தேர்வு விதிகளின் படி JE LDCE தேர்வு எழுதுவதற்கு +2 கல்வி தகுதி என்பது அவசியமாக்கப்பட்டுள்ளது. எனவே +2 கல்வி தகுதி இல்லாத தோழர்களுக்கு ஒரு முன் தகுதி (PRE QUALIFYING) தேர்வு நடத்த வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் தொடர்ச்சியாக வற்புறுத்தி வருகிறது. எனவே ஒரு முறையாவது இந்த தேர்வை நடத்த வேண்டும் என்றும் JE LDCE தேர்விற்கான தேதியினை நிர்ணயிக்க வேண்டும் என்றும் BSNL ஊழியர் சங்கம் DIRECTOR (HR) அவர்களுக்கு கடிதம் எழுதி உள்ளது.

**தனியார் மயத்தை முறியடித்த ஹரியானா மின் வாரிய ஊழியர்களின் வேலை நிறுத்தம்:-** ஹரியானா மாநிலத்தில் 23 துணைக் கோட்டங்களில் தனியார்மயமாக்கலுக்கு எதிரான தொடர்ச்சியான போராட்டங்களை ஹரியானா மின்வாரிய தொழிலாளர்களின் கூட்டு நடவடிக்கைக் குழு நடத்தி வந்தது. இந்த போராட்டத்தின் காரணமாக 7,400 ஒப்பந்த ஊழியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டார்கள். நூற்றுக்கணக்கான நிர்ந்தர ஊழியர்கள் தொலை தூர பகுதிகளுக்கு மாற்றல் செய்யப்பட்டார்கள். அனைத்திற்கும் மேலாக ஹரியானாவில் உள்ள பாஜக அரசாங்கம் வேலை நிறுத்தத்தை உடைக்க ESMA சட்டத்தை கட்டவிழ்த்து விட்டது. ஆனால் பொது மக்களால் பெரிதும் ஆதரிக்கப்பட்ட 80% ஊழியர்கள் பங்கேற்ற போராட்டத்தின் காரணமாக ஹரியானா அரசாங்கம் ஒரு உடன்பாட்டிற்கு வந்துள்ளது. இந்த உடன்பாட்டின் படி அரசாங்கம் தனது தனியார்மயமாக்கும் திட்டத்தினை திரும்ப பெற்றுள்ளது. அது மட்டுமல்லாமல் ஒப்பந்த ஊழியர்கள்கின் ஊதியத்தையும், நிரந்தர ஊழியர்களின் அலவன்ஸ்களையும் உயர்த்தவும் உடன்பாடு போடப்பட்டுள்ளது. பொது மக்களின் ஆதரவுடன் கூடிய தொழிலாளர்களின் ஒன்று பட்ட போராட்டங்கள் மோடி அரசாங்கத்தின் தவறான நவீன தாராளமய கொள்கைகளை பின்னுக்கு தள்ள முடியும் என்பதை இந்த வேலை நிறுத்தம் நமக்கு உணர்த்துகிறது. ஹரியானா மாநில மின் வாரிய தொழிலாளர்களின் ஒன்றுபட்ட போராட்டத்திற்கும் அதன் வெற்றிக்கும் BSNL ஊழியர் சங்கம் தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**